Registered as a News paper    பக்கங்கள் - 08    விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு    மக்கள் நாளிதழ்

Eezhanatham




இலவச பிரதி

நாதம் 01    திருவள்ளுவர் ஆண்டு 2035    வைகாசி 28    10. 06. 2004    வியாழக்கிழமை    ஓசை 34

## சர்வதேச சமூகம் வன்னிக்கு வருவதற்கு காரணம் மாவீரர்களின் தியாகமே

### கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

(நமது நிருபர்)

இன்றைய சமாதானச் சூழ்நிலையினை ஏற்படுத்தித் தந்தவர்கள் மாவீரர்கள் என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்துள்ளார். நேற்று முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் நடைபெற்ற மாவீரர் வீரவேங்கை சுகு நினைவான கணினிக் கட்டடத்



திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரை நிகழ்த்துகையில் இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற ஈழத்தமிழர்கள் மதிக்கப்படுவதற்கும், கௌரவிக்கப்படுவதற்கும் நிரந்தரமாக வாழ்வதற்குமான சூழ்நி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பாராளுமன்ற பெரும்பான்மையை எதிர்கட்சி கைப்பற்றும் நிலை!

(நமது நிருபர்)

ஹெல உறுமய தமது முழுமையான ஆதரவை எதிர்க்கட்சிக்குக் கொடுக்கும் பட்சத்தில், பாராளுமன்றப் பெரும்பான்மையான 113 ஆசனங்களை ஐக்கிய தேசிய முன்னணி நிரூபிப்பதற்கான வாய்ப்புப் பெறும்.

ஏற்கனவே ஐ.தே.மு. தன்வசம் வைத்துள்ள 82 ஆசனங்களுடன் தமிழ் கூட்டமைப்பின் 22 ஆசனங்களும், ஹெல உறுமயவின் 9 ஆசனங்களும் மலையக மக்கள் முன்னணியின் 1 ஆசனமுமாக மொத்தம் 114 ஆசனங்கள் உறுதியாகும்.

இவற்றில் ஏற்கனவே பிரிந்து சென்ற டிரோன் பெர்னான்டோவின் ஆசனத்தைத் தவிர்த்தால் கூட, 113 ஆசனங்கள் போதுமானதாகவே காணப்படுகிறது. இந்நிலையில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது ஆத ரவை ஐ.தே.மு.க்கு வழங்க வாய்ப்பிருக்கிறது. இதுதவிர.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# நடேசனின் படுகொலையை கண்டித்து கொழும்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

(நமது நிருபர்)

**மூத்த ஊடகவியலாளர் ஐ.நடேசன் தேசவிரோத சக்திகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவ த்தை கண்டித்து நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக ஊடகவியலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.**

சுதந்திர ஊடகவியலாளர்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த எதிர்ப்பு போராட்டத்தில் பல்வேறு ஊடகங்களிலிருந்தும் மூவினத்தையும் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ் ஊடகவியலாளர் ஐ.நடேசன் சுட்டுக் கொல்லப்பட்டு ஒருவாரமாகியும் இதுவரை கொலையாளிகள் கண்டு பிடிக்கப்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்களை ஜனாதிபதி இன்று சந்திக்கிறார்!

(நமது நிருபர்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று மாலை ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

ஆளும் தரப்புக்குள் ஏற்ப

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

### மட்டக்களப்பு மாவட்டம்

## கல்வி மாவட்ட தரமுயர்த்தலினால் மாணவர் சமூகம் பாதிப்படைகிறது

### மட்.அம்பாறை மாவட்ட தமிழ் எம்.பிக்கள் வலியுறுத்தல்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தை கல்வி மாவட்டமாக பிரகடனப்படுத்தியுள்ளதால் பல்கலைக்கழக அனுமதி, கல்விக் கல்லூரி அனுமதி போன்றவற்றில் மட்டக்களப்பு மாணவர்கள் பாதிக்கப்படுவது குறித்து மட். மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் மென்டிஸ் அவர்களின்கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

நேற்று பகல் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராசசிங்கம், பா.அரியநேத்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, எஸ்.தங்கேஸ்வரி. த.கனக

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட்.குறிஞ்சாமுனையில் இரு வெடி பொருட்கள் செயலிழப்பு

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு மாவட்ட மனிதநேய அமைப்பின் கண்ணிவெடி அகற்றும் மெக் நிறுவனத்தினர் நேற்று முன்தினம் மட். குறிஞ்சானைக் கிராமத்தில் இரண்டு வெடி பொருட்களை மீட்டு செயலிழக்கச் செய்தனர்.

வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குறிஞ்சாமுனையைச் சேர்ந்த வெற்றிவேல் கிருஷ்ணமூர்த்தி என்பவரது வளவு கிணற்றுக்குள் ஏற்கனவே மேற்படி நிறுவனத்தினரால் அடையாளப்படுத்தப்பட்ட 60 மில்லிமீற்றர், யூ.எச்.ஏ. எறிகணையொன்றும், அதன் அரைவாசியையும் மீட்டு பி.ப. 3.15 மணியளவில் செயலிழக்கச் செய்தனர்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மூதூரில்தானாக இணையவந்த 13 சிறார்கள் மீள ஒப்படைப்பு!

(திருமலை நிருபர்)

மூதூர் கிழக்கு பிரதேசத்தின் சம்பூர் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளின் அமைப்பில் சேர்ந்துகொள்ளச் சென்ற வயது குறைவான 13 சிறார்கள் செவ்வாய்கிழமை சம்பூரில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பணிமனையில் வைத்து பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் தலைமையில் நடைபெற்றஇந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட கட்டளையிடும் தளபதி கேணல் சொர்ணம், கேணல் பானு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மட்.செங்கல் உற்பத்தியாளருக்கு நவீன தொழில் நுட்ப பயிற்சி பட்டறை

(ரமேஷ்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கற்களின் தரத்தினை உயர்த்தும் வகையில் நவீன தொழில் நுட்ப பயிற்சிப்பட்டறை ஆரம்பிக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் கு.தேவராஜா தெரிவித்தார்.

பட்டிப்பளை, வவுணதீவு செங்கல் உற்பத்தியாளர்களின் சங்கத் தலைவர் ஏ.தயானந்தர

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

### இன்றைய நாளில்

**இன்று படுகொலைகள் நாள்**

150 தமிழர்களைப் பலி கொண்ட அம்பாறை படுகொலை நடந்த நாள் (10-11.06.1956)

சுதந்திரபுரப் பகுதியில் விமானத்தாக்குதலில் 25இற்கு மேற்பட்ட தமிழ்மக்கள் கொல்லப் பட்டனர் (10.06.1998)

மண்டைத்தீவில் 31 குருநகர் மீனவர் படுகொலை (1986)

## வவுனியாவில் பிரதேச பொறுப்பாளர் மீது பொலிசார் தாக்குதல்!

(நமது நிருபர்)

வவுனியா புதுக்குளம் பிரதேச பொறுப்பாளர், வவுனியா போக்குவரத்து பொலிசாரால் தாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் வவுனியா போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினருக்கு முறையிட்டுள்ளனர்.நேற்று மதியம் வவுனியா புதுக்குளம் பிரதேசப் பொறுப்பாளர்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## சிறிலங்கா மிக் 27ரக விமானம் விபத்தில் நொருங்கி வீழ்ந்தது

### விமானி பரசூட் மூலம் உயிர் தப்பினார்

(நமது நிருபர்)

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான மிக் - 27 ரக விமானமொன்று நேற்று காலை 8.45 மணியளவில் நீர்கொழும்பு களப்பில் விபத்துக்குள்ளானது.

விமானத்திலிருந்த விமானி பரசூட் மூலம் உயிர் தப்பியுள்ளார். இரண்டு விமானங்கள் பயிற்சியிலீடுபட்டிருந்ததாகவும், அதில் ஒன்றே விபத்துக்குள்ளான

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## செய்தித் துளிகள்

### மீள்குடியேற்றப் பணம் வழங்கல்

(கர்சனன்)

ஏறாவூர் பற்று மேற்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தால் பதுளை வீதியிலுள்ளமீள்குடியேற்றக்கிராமங்களுக்கான உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே இப்பிரதேசத்திற்கு இரண்டு தடவைகளில் வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போது முன்றாவது தடவையாக 187 பேருக்கு தலா 25,000 ரூபா வீதம் வழங்கப்படவிருப்பதாக ஏறாவூர் மேற்கு சமுர்த்தி வங்கிச்சங்க ஊழியர் தெரிவித்தார்.

### பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை

( எஸ் சிவராஜா)

நாட்டிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு எடுத்துள்ள தீர்மானத்திற்கமைய திருக்கோயில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள 28பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சைகள் நேற்றும்,இன்றும் திருக்கோயில்பிரதேசசெயலாளர் திரு ஏ.கே. தவராஜாவினால் நடத்தப்படுகிறது.

### குடியேற்றக் கிராமம் அபிவிருத்தி

(முத்துமாதவன்)

கட்டு முறிவு, ஆண்டான்குளம் மீள்குடி யேற்றக் கிராமத்தின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் 125வீடுகள்., கிணறுகள், மலசலகூடம், கலாசார மண்டபம் என்பன நிறுவப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வேலைத் திட்டத்தினை சர்ரநிறுவனம் பொறுப்பேற்று ள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(எஸ். நிலாந்தன்)

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் க. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக உதவி அரசாங்க அதிபர் திருமதி. ஆர். கேதீஸ்வரன் மற்றும் பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

### கொடுப்பனவு கிடைக்கவில்லை

(முத்து மாதவன்)

கடந்த பாராளுமன்ற பொதுத்தேர்தல் காலத்தின் போது தேர்தல் கடமையில் ஈடுபட்ட கல்குடா வலய உத்தியோகஸ்தர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதில் அதிபர்கள்,ஆசிரியர்கள், சிற்றூழியர்களெனப் பலர் அடங்குவது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் மாணவி மீது சேட்டை புரிந்த இளைஞருக்கு தொடர்ந்து விளக்க மறியல்

(நமது நிருபர்)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் மாணவி ஒருவர் தனியாக சென்று கொண்டிருந்தபோது அங்க சேஷ்டை புரிந்த இளைஞர் ஒருவரை வவுனியா நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. நேற்றைய தினம், மேற்படி இளைஞன் மாணவி தனியாக சென்று கொண்டிருந்த போது, தகாத சொற் பிரயோகங்களும் அங்க சேஷ்டைகளும் புரிந்ததாகவும், பெண் கூச்சலிட்டபோது அருகிலிருந்த பொதுமக்கள் பிடித்துள்ளனர். இவரை பாலியல் 22 ஆம் சட்டம் 1995 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டக்கோவையின் 345 ஆம் இலக்கப்பிரிவின் கீழ் வவுனியா பொலிசார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட, பெண் - பெண்ணின் தாயார் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பின்னர் சந்தேக நபரை விளக்கமறியலில் வைப்பதற்கு அனுராதபுரம் சிறைச்சாலைக்கு அனுப்புமாறு வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார். இந்த குற்றம் நிரூபிக்கப்படும்போது சம்பந்தப்பட்ட நபர் ஐந்து வருட சிறைத் தண்டனையினை அனுபவிக்க நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

## புவியியற் பாடம் தொடர்பான தவறான கருத்தே மாணவர் கற்காததற்கு காரணம்

### புவியற்துறை விரிவுரையாளர் செல்வி எஸ்.பொன்னையா

(எஸ்.நிலாந்தன்)

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புவியியல் துறையில் கல்வி கற்பதற்கு மாணவர்கள் அக்கறைகாட்டு வதில்லை. புவியியல் துறைப்பாடங்கள் கடினமானவை என்றும் மாணவர் மத்தியில் அபிப்பிராயம் காணப்படுகின்றது.

இவ்வாறு நேற்று களுவாஞ்சிகுடி இராஜமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் இராசரெத்தினம் தவராஜாவின் "இலங்கை உலக மெற்றிக் தேசப்படப்பயிற்சி" நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிழக்குப்பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி எஸ்.பொன்னையா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் புவியியல் துறைப்பாடங்கள் கஷ்ரமானவை என்ற உணர்வு மாணவர்கள் மத்தியில் ஆசிரியர்களாலும் கல்விச் சமூகத்தினராலும் பரப்பப்பட்டுள்ளது. தற்போதுள்ள காலங்களில் புவியியல் துறையில் கல்வி கற்க அதிகமானவர்கள் அக்கறை .கொண்டுள்ளனர். இது போன்ற ஆர்வமுள்ளவர்களுக்கு இந்நூல் பெரிதும் உதவக்கூடியது.

இதுவரை இலங்கையில் எந்த மெற்றிக் தேசப் படங்களும் தமிழ் மொழியில் வெளிவரவில்லை. தமிழ்மொழியில் இவ்வாறான மெற்றிக் தேசப்படங்கள் வெளிவருவது புவியியல் கல்வியை மேலும் வலுப்படுத்தும் இதுபோன்ற நூல் வெளியீட்டாளர்களை ஊக்கப்படுத்துவதற்கு கல்வித்திணைக்களங்கள் முன் வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

## மீண்டுமொரு தேர்தலில் ஐ.தே.க வெற்றி பெற முடியுமா?

### சாவால் விடுக்கிறார் பெர்னாண்டோபுள்ளே

(நமது நிருபர்)

இன்னுமொரு தேர்தலை சந்திப்பதற்கு நாங்கள் தயார். எம்மோடு போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாரா? இப்படிச் சவால் விடுத்துள்ளது அரசுத் தரப்பு. வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நேற்று முன்தினம் தகவல் திணைக்களத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்தச் சவாலை விடுத்தார்.

பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அமைத்து எமது பலத்தை நிருபிப் பதற்கு வழி சமைக்கும் இன்னு மொரு தேர்தலுக்கு நாங்கள் தயார். நாடாளுமன்ற அமர்வுகளுக்கு முட்டுக் கட்டை போட்டு அரசிற்குப் பெரும் நெருக்கடியை தோற்றுவிக்கும் ஐ.தே. கட்சி அதற்குத் தயாரா? என்றார்.எமது அரச அலுவல்களை மேற் கொள்வதற்கும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கும் ஐக்கிய தேசிய முன்னணி முட்டுக்கட்டையாக இருக்கின்றது. அது மட்டுமல்ல விசமத் தனமாக நாடாளுமன்றத்தில் குழப்ப நிலை களையும் தோற்றுவிக்கின்றது.வடமேல் மாகாண சபைத் தேர்தல்களில் எதிர்க்கட்சியினருக் குப் பாடம் புகட்டியது போன்று எமது பலத்தை வெளிப்படுத்தும் மற்றுமொரு தேர்தலுக்கு நாங்கள் தயார் என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டவருக்கு வவுனியா நீதி மன்று ஆறுமாத சிறை!

(நமது நிருபர்)

வவுனியாவில் கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் மூன்று வீட்டுக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட இரண்டு நபர்களுக்கு ஆறுமாத சிறைத்தண்டனை வழங்குமாறு வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார். நேற்று முன் தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சந்தேக நபர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேக நபர்கள் ஏற்கனவே ஏழு மாதகாலம் சிறைத்தண்டனை அனுபவித்து இருப்பதால் அதனையும் தண்டனைக் காலமாக எடுத்துக் கொள்ளுமாறும் நீதவான் எம்.இளஞ்செழியனிடம் தெரிவித்தார்.

## வவுனியா முன்பள்ளி ஆசிரியர்க்கு மூன்றாம் கட்ட பயிற்சி நெறி!

(ச.மயூரன்)

வவுனியா வடக்கு முன்பள்ளி கல்வி மேம் பாட்டுநிலையத்தால் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவன நிதியுதவியுடன் நடாத்தப்படும் 35 ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியில் 3ம் கட்ட பயிற்சி நெறி கடந்த 2,3, 4.ம் திகதிகளில் இடம் பெற்றது. இதில் சிறுவர் உரிமையும், சமூக மேம்பாடும் என்ற பொருளில் வவுனியா மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தி யோகஸ்தர் ஜே.ஜே.கனடி, சிறுவர் துஸ்பிர யோகம் என்ற பொருளில் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி சசிதரன், கற்றல் செயல்பாட்டில் பெற்றோர்களின் பங்கு என்ற பொருளில் மன்னார் மாவட்ட முன்பள்ளிகல்வி மேம்பாட்டு நிலைய விரிவுரையாளர்களும் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

## தாந்தாமலைப் பகுதியில் தேக்குமர நடுகை திட்டம்

(எஸ்.நிலாந்தன்)

வெல்லாவெளிப் பிரதேச வனப் பாதுகாப்பு காரியாலயத்தினால் சுற்றாடல் செயற்றிட்டத்தின் கீழ் தாந்தாமலை அடைச்சகல் பகுதியில் 25 ஹெக்டயர் காணியில் தேக்கு மர நடுகை த்திட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்தைச் சேர்ந்த 25 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு .இதற்கான ஆலோசனைகளை வழங்கியும் மரங்களை நடுவதற்கான உதவிகளையும் வழங்குவதுடன் இவர்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டு மாவட்டத்தில் சட்டவிரோதமாக ஆற்றுமணல் ஏற்றுவதற்கு தடை!

(எஸ். நிலாந்தன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றுவதை தடை செய்வதற்கான உத்தரவு பிரதேச செயலகங்கள் ஊடாக விதிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் சட்டவிரோ தமாக மணல் அகழும் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதாகவும் இதனால் வெள்ளப்பெருக்கு, மண்ணரிப்பு,வீதி உடைப்பு போன்ற அபாயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக களுவாஞ்சிக்குடி, காயான்குடா, கித்துள்.வேப்பைவெட்டுவான், வவுணதீவு போன்ற பகுதிகளில் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள்அதிகரித்துக் காணப்படுவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.



இராசரெத்தினம் தவராஜாவின் "இலங்கை உலக மெற்றிக் தேசப்படப்பயிற்சி நூல் "வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சிரேஸ்ட விரிவுரையாளர் செல்வி எஸ். பொன்னையா மங்கள விளக்கேற்றுவதையும், நூலாசிரியர் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம் (படம் - நிலாந்தன்)

# அரசின் உதவியை எதிர்பார்த்திருந்தால் முன்னேற்றம் பெற முடியாது.

## -மகாசக்தி நிறுவனத் தலைவர் என்.மணிவாசகன்-

(விபி சிவப்பிரகாசம்)

எடுத்ததற் கெல்லாம் அரசாங்கத்தின் உதவிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் முன்னேற்றம் பெற முடியாது. நாடுசுதந்திரம் பெற்ற நாள் முதல் அரசியல்வாதிகள் தங்கள் கதிரைகளைப் பாதுகாப்பதற்காக இலவசம் என்றவார்த்தையைப் பிரயோகித்து தேசிய வருமானத்தையும் சீர்குலைத்து மக்களையும் சோம்பேறிகளாக மாற்றிவிட்டதையும் இப்போது தான் நாம் உணரத் தொடங்கியுள்ளோம்.

எமது மூதாதையர்கள் மன்னர் காலத்தில் அவர்கள் கையினால் மண் சுமந்து கட்டிமுடித்த நீர்த்தேக்கங்களில் இருந்து இன்று நாம் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்று வருகின்றோம். இன்றுஎமது பகுதியில் உள்ள சிறிய குளங்களையோ, அல்லது வீதிகளையோ திருத்துவதற்குக் கூட அரச உதவிகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நிலைமாறி கிராமமக்கள் ஒன்றுகூடி சிறிய வேலைகளையாவது செய்து முடிப்பதற்கு முன்வரவேண்டும்.

இவ்வாறு அக்கரைப்பற்று கண்ணகிபுரம் மீள் குடியேற்ற கிராமத்தில் சோபா அமைப்பின் அனுசரணையுடன் மகாசக்தி நிறுவனம் குடியேறியுள்ள மக்களின் முக்கியமான குடிநீர்ப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் முகமாக மூன்று முப்பது அடி ஆழக் கிணறுகள் அமைக்கும் பணியை கடந்த ஞாயிற்றுக் கிழமை(6.06.04) பகல் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மகாசக்தித் தலைவர் கவிமணிஎன். மணிவாசகன் குறிப்பிட்டார். வைபவத்தில் திட்டப் பொறுப்பாளர் அசோகா ஆறுமுகம் எல்லோரையும் வரவேற்றுப் பேசியதுடன் சமயக்கிரியைகளுடன் மக்கள் புடைசூழ கவிமணி மணிவாசகன் அத்திவாரக்கல்லை நட்டு ஆரம்பித்து வைத்தார்.

எந்த ஒரு காரியத்தை மேற்கொள்வதாக இருந்தாலும் அது மக்கள்மயப்படுத்தப்படும் போது தான் நாம் வெற்றி காணமுடியும். எமது கிராமத்தை கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு எப்படி இருந்தது என்று பாருங்கள் இன்று இந்த மகாசக்தி அமைப்பின் மூலம் ஒருகட்டமைப்பின்கீழ் இரண்டாயிரத்தி ற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளில்இருந்துஅகதிகளாக வந்தவர்களில் 50 பேர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட மகாசக்தி கிராம மக்களின் முன்னேற்றத்தைப் பாருங்கள். இதேபோன்று இந்தக் கிராமத்தில் தற்போது மீள் குடியேறிய 378குடும்பங்க ளிலும் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றோம். இதுவரை ஏற்கனவே அமைகப்பட்டு சேதமடைந்த பாடசாலைக்கட்டிடம் உட்பட பொதுக் கட்டிடங்களையெல்லாம் திருத்தி அதனைச் செயல்ப்படுத்துவது உங்களிடம் ஒப்படைக்கப் பட்டிரு க்கிறது. இதனைப் பாதுகாத்து பராமரிக்க வேண்டியது உங்கள் கையில் தான் தங்கியிருக்கின்றது என்றார்.

இந்தக்கிராமத்தில் மலசலகூடங்கள், பொதுச்சுகாதார நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்வதற்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு இங்கு தங்கியிருந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான ஏற்பாடுகளை மகாசக்தித் தலைவர் கவிமணி மணிவாசகன் ஏற்பாடுகளைச் செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

(ச.மயூரன்)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களுக்கு ஒப்பரேசன் யூ. எஸ். ஏ நிறுவனத்திடமிருந்து பெற்ற மருத்துவ உபகரணங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அண்மையில் மாவட்ட அரசஅதிபர் ,வைத்திய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

வவுனியா கச்சேரியில் வைத்து 11 மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி மருத்துவ உபகரணப் பொருட்களைத் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி முன்னிலையில் அந்தந்த மாவட்ட அரச அதிபர், சுகாதாரவைத்திய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

# தேசப்படப் பயிற்சி நூல் வெளியீட்டு விழா

(எஸ்.ரவீந்திரன்)

இலங்கை உலக மெற்றிக் தேசப்படப்பயிற்சிநூல் வெளியீட்டு விழாநேற்று களுவாஞ்சிக்குடி இராஜ மாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடை பெற்றது.

நூலாசிரியர் இராசரெத்தினம் தவராசாவினால் வெளியிடப்பட்ட இந்நூலின் முதற்பிரதியை பட்டிருப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி .புள்ளநாயகம் பெற்றுக் கொண்டார். நூலின் ஆய்வுரையை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியல்த் துறைத்தலைவர் செல்வி எஸ். பொன்னையா நிகழ்த்தியதுடன் கருத்துரையை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் நிகழ்த்தினார்.

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையின் உயரதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.இலங்கை உலக மெற்றிக் தேசப்படப்பயிற்சி நூல் வெளியீடானது மாணவர்களுக்கு பயன்தரும் வகையில் வெளியிடப்படும் ஒரு நூலாகும் ஆசிரியர்துறையில் பல வருடம் அனுபவம் கொண்ட நூலாசிரியரால் வெளியிடப்படும் இந்நூல் மாணவர்களின் தேவைகளையும் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் ஒரேபார்வையில் கொண்டதே இப்பயிற்சிநூல் என பிரதிக் கல் விப் பணிப்பாளர் திருமதி.என். புள்ள நாயகம் தெரிவித்தார்.



மருதமுனை இங்கிலிஸ் கிங்டம் அமைப்பின் ஏற்பாட்டில் ஆங்கிலக் கல்வியைப் பெண்கள் மத்தியில் அறிமுகம் செய்வதற்கான பெண்கள் பிரிவொன்று அங்குரார்ப்பணம் செய்த வைபவம் சமீபத்தில் (2004.05.28) மருதமுனை அக்பர் வீதியில் நடைபெற்ற போது அமைப்பின் பொருளாளர் ஜனாப் அமீன், யுவதிகள் சார்பாக சுபுஹானி முஸ்தபா ஆகியோர் உரையாற்றுவதையும், அமைப்பின் தலைவர் புன்னகை வேந்தன், செயலாளர் புவி பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சட்டத்தரணி மஹ்பூபா நியாஸ்டீன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படமும் தகவலும்:- மருதமுனை நிருபர்)

# பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை காரைதீவுக்கு விஜயம்

( எஸ்.சிவராஜா)

அம்பாறை மாவட்ட தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கனகசபை பத்மநாதன் அவர்கள் காரைதீவு சண்முகா வித்தியாலயத்திற்கு அண்மையில் திடீர்விஜயமொன்றை மேற்கொண்டார். இவ்விஜயத்தின் போது பாடசாலையின் நாளாந்த நடவடிக்கைகள் பற்றியும் கண்டறிந்ததுடன் அதிபர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினார்.

இதன்போது அதிபர் பாடசாலையில் நீண்டகாலமாக இருந்து வரும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான தேவைபற்றிக் கூறினார். குறிப்பிட்ட சில ஆரம்ப வகுப்புகளுக்கு ஆசிரியர்கள் இல்லாமையால் வகுப்புக்களில் சரியான கற்பித்தலை மேற் கொள்ள முடியாது இருப்பதாகவும் வேறுவசதியுள்ள பாடசாலைகளில் இருந்து இடமாற்றம் பெற்று வந்து சேவையாற்ற ஆசிரியர்கள் முன்வருவதில்லை என்றும் முறையிட்டுக்கொண்டனர். இக் கலந்துரையாடலில் பாடசாலை நலனில் அக்கறை கொண்ட அப்பிரதேசத்தைச் சேர்ந்த புத்தி ஜீவிகளும் இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இவற்றையெல்லாம் கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் தன்னால் இயலுமானவரை இப்பிரச்சினைகளுக்கு தீர்வினைப்பெற்றுத் தருவதாக இக்கூட்டத்தில் உறுதியளித்துச் சென்றார்.

## மிதிவெடிகள் அகற்றப்படாமையினால் மக்கள் மீளக் குடியமர முடியாத நிலை

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்படாமையினால் மக்கள் மீளக் குடியமர முடியாதுள்ளனர். வடமராட்சி கிழக்கின் பெரும் பாலான நிலப்பகுதி சிறி லங்காப் படையினரின் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன.

இந்த நிலப்பகுதிகளில் மிதிவெடிகள், பொறி வெடிகள் வெடிக்கும் நிலையில் உள்ள வெடி பொருட்கள் என வெடி பொருள் ஆபத்து நிறைந்த ஒரு பிரதேசமாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது.



நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்துக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபாவினால் 23 தையல் இயந்திரங்களை அன்பளிப்புச் செய்வதற்கவருகை தந்த போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், பிரதேச செயலாளர், நிருவாக உத்தியோகத்தர் ஆகியோரை பொதுமக்களும், உத்தியோகத்தர்களும் வரவேற்ற போது எடுத்த படம் (படமும் தகவலும்:- தாசன்)

## வீதிகள் புனரமைப்பு

(அம்பாறை நிருபர்)

கடந்த வன்செயலில் பாதிக்கப்பட்ட அம்பாறைமாவட்ட மாணிக்கமடு கிராமத்தின் வீதிகள் நெக்கோட் திட்டத்தின் மூலம் புனரமைக்கப்படுகின்றன.

இதன்முதற்கட்ட நடவடிக்கையாக நான்கு லட்சம் ரூபாசெலவில் மேற்படி கிராம வீதிகள் துரித கதியில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# மடு கல்வி வலயத்தில் பாடசாலைகள் இயங்கவில்லை

(நமது நிருபர்)

மன்னார் மடு கல்வி வலயத்தில் மூன்று பாடசாலைகள் மூடப்பட்டும், ஐந்து பாடசாலைகள் சொந்த இடங்களிலும் இயங்க முடியாதுள்ளன.

சிறிலங்கா இராணுவத்தி னரின் படை நடவடிக்கை மூலம் இவ்வலயத்திற்கு உட்பட்ட 41 பாடசாலைகளில் ஐந்து பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இவற்றை விட இரணை இலுப்பை க்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, தட்சனாமருதமடுவிலும், கட்டை அடம்பன், திருக்கேதீஸ்வரம், காக்கையன்குளம், நாவற்குளம் ஆகிய பாடசாலை கள் பரியாரி கண்டலிலும் தற் காலிகமாக இயங்கி வருகின்றன. இந்த கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் 8,828 மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற முக்கிய பாடங்களுக்கு பெரும் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

அத்தோடு ஆசிரியர்கள் விடுதியின்மை, கட்டட வசதி இன்மை, போக்குவரத்து வசதியின்மை, குடிநீர் வசதியின்மை போன்ற அடிப்படை வசதிகள் இன்றி இவ்வலயப் பாடசாலைகள் நீண்டகாலமாக இயங்கி வருகின்றன.

# நான்கு ஆண்டுகளில் வெடி பொருட்களில் சிக்கி 26பேர் பலி!

(நமது நிருபர்)

இராணுவ நடவடிக்கையின் போது வன்னிப் பகுதியில் புதைக்கப்பட்ட வெடிபொருட்களில் சிக்கி கடந்த நான்கு ஆண்டுகளில் 26 பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

இராணுவம் ஆக்கரமித்திருந்த பகுதிகளை பின்னர் விடுதலைப் புலிகள் மீட்டெடுத்த பகுதிகளில் இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு அதிக அளவு நாட்டம் காட்டுவதும் இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

2000 ஆண்டு முதல் 119 வெடி விபத்து சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது இதில் 26 பேர் மரணமாகியும் 233 பேர் காயங்களுக்கும் உள்ளாகி இருப்பதாக வெண்புறா நிறுவனம் தெரிவிக்கின்றது.

# பூர்வாங்கக் கூட்டம்

(வி.ரி சகாதேவராஜா)

தூய அன்னை சாரதா தேவியின் 150 வது ஆண்டு விழாவையொட்டிய பிரதேச மட்ட நிருவாகிகளுக்கான பூர்வாங்கக்கூட்டம் எதிர்வரும் ஞாயிறன்று கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன்சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

மிஷன் சுவாமிகளான சுவாமி ஜீவனானந்தா,சுவாமி அஜராத்மானந்தா ஆகியோர் அன்னை ஸ்ரீசாரதாதேவியாரின் ரதபவனி தொடர்பாக காரைதீவு, கல்லாறு, கல்முனை, களுதாவளை, செட்டிபாளையம், மட்டக்களப்பு , சித்தாண்டி, வந்தாறுமூலை, செங்கலடி போன்ற கிராமங்களில் பிரதேசமட்டக் குழுக்களை நியமித்திருந்தனர்.

ஸ்ரீ சாரதா தேவியின் ரதபவனி இம்மாதம் 23ம்திகதி தொடக்கம் 26ம்திகதிவரை 04நாட்கள் காரைதீவு தொடக்கம் சித்தாண்டி வரைநடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




## உலகம் வியக்கும் உதைபந்தாட்டம்

உதைபந்தாட்டப் போட்டி என்றாலே பல உலக நாடுகளைக் கவர்ந்த ஒரு விளையாட்டு அதனை ஒரு தேசிய விளையாட்டாக கொண்டுள்ள நாடு ஸ்கொட்லாந்து. மாத்திரமே. ஏனைய உலக நாடுகள் இதனை தங்களது தேசிய விளையாட்டாக கொள்ளாத நிலையிலும் உலகளாவிய ரீதியில் புகழ்மிகு விளையாட்டாக வளர்ந்து காணப்படும். ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் இந்தக் கால்பந்தாட்ட விளையாட்டு பிராந்தியத்தின் முதன்மையான ஒரு விளையாட்டாக அங்கீரித்துள்ளமை இதன் பெருமையினை பறைசாற்றுகின்றது.

அந்தவகையில் புகழ்படைத்து விளங்கும் இந்த உதைபந்தாட்ட விளையாட்டு 1904 ம் ஆண்டில் முதல் முதலில் சுவிஸ்லாந்தில் ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலப்பகுதியில் இந்தச் சுற்றுப்போட்டிகளில் பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், போலாந்து, ஸ்பெயின் சுவிற்லாந்து, போன்ற ஏழு நாடுகளே கலந்து கொண்டு விளையாடின.

காலப்போக்கில் இந்தக்கால்பந்து விளையாட்டுப் போட்டிகளில்பல அணிகள் இணைந்து கொண்டன. 1940 ம் ஆண்டு காலகட்டங்களில் 57 நாடுகளும் ,1970ம் ஆண்டுகாலப்பகுதிகளில் 137நாடுகளும் இப்போட்டிகளில் விளையாட ஆர்வம் கொண்டு தங்களைப்பதிவு செய்து கொண்டதோடு நடப்பாண்டு காலப்பகுதியில் இந்த எண்ணிக்கையானது 204 ஆக அதிகரித்து உலகளாவிய ரீதியில் பெரியளவிலான பரினாமத்தினைப் பெற்று உலகிலே முதன்மையான விளையாட்டு என்ற பெருமையோடு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக பரிணாமவளர்ச்சி கண்டு வளர்ந்த இந்த கால்பந்தாட்ட உலக கிண்ணப் போட்டியே உலகளாவிய ரீதியில் சிறப்புப்பெற்று விளங்குகிறது. அந்த வகையில் முதல்த் தடவையாக 1930ம் ஆண்டிலே உலகக்கிண்ண விளையாட்டு விழா உருகுவேயில் இடம் பெற்றது.இதில் அந்த அணியே முதல் உலகக்கிண்ணத்தையும்



சுவீகரித்தது.

இதனைத் தொடர்ந்து இன்றுவரை 17 உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் அதிகதடவைகள் கால்பந்து உலகக்கோப்பையினை அமெரிக்காவே சுவீகரித்துள்ள போதிலும் பிரேசில் அணியானது ஐந்து தடவைகளும், உருகுவே அணியும் ,ஆர்ஜென்டினா அணியும் தலா இரண்டு தடவைகளும் பெற்றுள்ளன. அதேவேளை ஜேர்மன் , இத்தாலி அணிகள் தலா மூன்றுமுறை உலகக் கிண்ணத்தினை சுவீகரித்ததோடு இங்கிலாந்து, மற்றும் பிரான்ஸ் நாட்டு அணிகள் தலா ஒரு தடவையும் உலகக் கிண்ணத்தினை சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்த உகலக் கிண்ணப் போட்டியானது. ஆண் பெண் இருபாலருக்குமென இடம்பெறுவதோடு 19 வயதுடையோருக்கிடையிலும்,17 வயதுக்கிடைப் பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டிகள் இடம்பெறும் அதே வேளை கழகங்களுக் கிடையிலான உலகக் கிண்ணப் போட்டிகளும் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

# முரளி அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தில் இணைவாரா?

இந்த மாதம் நடைபெறவிருக்கும் இலங்கை அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள இலங்கை அணியின் வீரர்களது பெயர்கள் இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவினால்



கடந்த சனிக்கிழமையன்று வெளியிடப்பட்டது. இந்த 16 பேர் அடங்கிய பயிற்சிப் போட்டிகளில் ஈடுபடவுள்ள அணியில் இலங்கையின் 527 விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்து விளங்கும் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் பெயரும் இடம் பெற்றுள்ளது.

கடந்த அவுஸ்திரேலியப் போட்டி ஒன்றின் போது தூஷ்ரா பாணியிலான பந்து வீச்சின் முறையில் எழுப்பட்ட சர்ச்சையினைத் தொடர்ந்து பல தரப்பட்ட விமர்சனங்களைச் சந்தித்த முரளிதரன் சென்ற மாதம் எதனையும் பொருட்படுத்தாது உலக சாதனையை நிலை நாட்டிய போது ஊடகவியலாளர்களுக்கு கருத்துக் கூறும் வேளையில் எதிர்வரும் மாதம் அவுஸ்திரேலியாவுடனான சுற்றுப் போட்டியில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்திருந்தார்.

முரளிதரனின் பந்து வீச்சுக்குறித்து முதன் முறையாக அவுஸ்திரேலிய நடுவர் டரல் ஹேயர் முரளி வீசுகின்ற பந்துவீச்சுப் பாணி தவறுதலானது எனக்கூறிய அதே வேளையில் 1995, 1999 போன்ற ஆண்டுகளிலும் முரளியின் பந்து வீச்சுக் குறித்து பல சர்ச் சைகள் எழுந்த போதிலும் அவை பெரியளவான தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை.

அண்மையில் இங்கிலாந்து நாட்டு நடுவர் கிறிஸ் ரோட்டின் சுமத்திய பெரிய அளவிலான தூஷ்ரா பந்து வீச்சுத் தொடர்பான புரளி உலக நாடு முழுவதிலும் பாரிய அளவிலான சர்ச்சையினைத் தோற்றுவித்தது. அது போலவே அவுஸ்திரேலிய நாட்டுப் பிரதமர் ஜான் ஹோவர்ட் முரளி பந்தை எறிகிறார் எனக் குற்றம் சாட்டியமை அந்த நாட்டு கிரிக்கெட் அணி வீரர்கள் மற்றும் அந்த நாட்டுப் பத்திரிகைகள் என்பனவும் முரளிதரனின் பந்து வீச்சுக் குறித்துத் தப்பான அபிப்பிராயத்தில் பற்பல விமர்சனங்களை வாரி வீசிய வண்ணம் இருந்தன. அத்தோடு தப்பான கருத்துக்களையும் பகிரங்கமாக விடுத்துமிருந்தது.

இவ்வாறான அவுஸ்திரேலிய நாட்டினது தப்பபிப்பிராயத்தினால் முரளிதரன் அவுஸ்திரேலியாவுக்கான தனது சுற்றுப் பயணத்தினை ரத்துச்செய்யவுள்ளதாக பல ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். அந்த முடிவினை ஏற்பதாக இலங்கை கிரிக்கெட் சபை உட்பட அனைத்து அதிகாரிகளும் ஆதரவு தருவதாகவும் முரளி எடுக்கும் முடிவினைப் பொறுத்தே அவர் அவுஸ்திரேலியா செல்வது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தனர்.


இவ்வாறான சூழ்நிலையில் இலங்கைக் கிரிக்கெட் தெரிவுக்குழுவானது அவுஸ்திரேலியா சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் அணியினை தெரிவு செய்துள்ளது.இந்த 16 பேர் கொண்ட குழுவில் பயிற்சிகளில் ஈடுபடவுள்ள இலங்கை அணியில் முத்தையா முரளிதரனின் பெயரும் இடம்பெற்றுள்ளது. இதே நிலையில் அவர் அவுஸ்திரேலியா சுற்றுப் பயணத்தை மேற்கொள்வாரா இல்லையா என்ற இறுதி முடிவு இதுவரை தெரியவரவில்லை.

இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை அதிகாரி துலிப் மெண்டிஸ் கருத்துக்கூறும் போது முரளிதரனது அவுஸ்திரேலியாவுக்கான சுற்றுப் பயணம் குறித்து திட்டவட்டமான இறுதி முடிவினைக் கூற முடியாது எனவும், அவர் அவுஸ்திரேலியா செல்வதற்குரிய வாய்ப்பு50 சதவீதமே உள்ளது எனவும், செல்லாது விடுவதற்குரிய வாய்ப்பும் 50 வீதமுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அதே வேளையில் முரளி அவுஸ்திரேலியா சுற்றுப் பயணம் தொடர்பாக இது வரையில் எந்த விதமான கருத்தையும் வெளிப்படுத்தாத நிலையிலே முரளிக்கு மிக நெருங்கிய தகவல்களை வைத்து நோக்கும் போது முரளிதரன் அவுஸ்திரேலியா செல்லாது விடுவதற்குரிய வாய்ப்புக்களே அதிகமாக இருப்பதாகக் கூறுகின்ற வேளையில் அவரது அவுஸ்திரேலியாப் பயணம் குறித்து தொடர்ந்தும் சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இவரது அவுஸ்திரேலியப் பயணம் குறித்து அனைத்து உலக நாடுகளும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் அவுஸ்திரேலிய அணி வீரர்கள் மற்றும் அந்நாட்டுப் பத்திரிகைகள் என்பன தற்போது முரளிதரனது வரவினை எதிர்பார்த்திருப்பதாகக் கூறி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இருந்த போதிலும் முரளிதரன் உட்பட விளையாட்டு விற்பன்னர்கள் ஒரு சாரார் மிகவும் மோசமான முறையில் முரளிதரனையும், அவரது பந்து வீச்சுப் பாணி குறித்தும் ஏற்படுத்தி வந்த அவமானத்துக்குரிய கருத்தினை வைத்து முரளிதரன் அந்த நாட்டுடனான



சுற்றுப் பயணத்தில் ஈடுபடக்கூடாது எனக் குறிப்பிடும் அதே வேளையில் இன்னொரு சாரார் இந்தச் சுற்றுப் போட்டியிலே முரளி கலந்து கொள்வதன் மூலம் அந்த நாட்டு மற்றும் சில உயர் அதிகாரிகளுக்கு தனது திறமையினை வெளிக்காட்டும் வகையில் அவுஸ்திரேலிய சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும் என சில விளையாட்டு விற்பன்னர்கள் கருத்துத் தெரிவித்து வரும் வேளையில் முரளிதரன்அவுஸ்திரேலியா சுற்றுப் பயணம் மேற்கொள்வாரா இல்லையா என்பதைப் பொறுத்திருந்தே பார்ப்போம்.

## வலுமிக்க அணிகளுடன் களமிறங்கும் இலங்கையணி சாதனை படைக்குமா?

இந்த மாதம் அவுஸ்திரேலியா சுற்றுப் பயணம் மேற்கொள்வதோடு 2007ம் அண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி வரையிலான காலப்பகுதியில் இலங்கை அணியானது எதிர்காலத்தில் விளையாடவுள்ள சில சுற்றுப் போட்டிகள் குறித்து இக்கட்டுரையில் நோக்குவோம்.

இந்த மாத இறுதியில் மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய அணியுடனான சுற்றுப் போட்டியினைத் தொடர்ந்து இலங்கை அணி ஆகஸ்ட் மாதம் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தென்னாபிரிக்க அணியுடனான போட்டிகளில் விளையாடவுள்ள அதேவேளை செப்டெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐ.சீ.சீ.கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ள இலங்கை அணியானது மாவன் அத்தப்பத்து தலைமையிலான 16 வீரர்களைக் கொண்ட அணி இலங்கைத் தெரிவுக் குழுவால் கடந்த சனிக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று சுற்றுப் போட்டிகளிலும் விளையாடவுள்ள அணியில் தலைவர் மாவன் அத்தப்பத்துடன் உப தலைவர் மஹேல ஜெயவர்த்தன, சனத் ஜெயசூரிய, குமார் சங்கக்கார, சமிந்தவாஸ், உப்புள் சந்தன,நுவான் சொய்ஷா, டி.எல்.டில்ஷான், டில்கார பெனாண்டோ, டிலான் சமரவீர,லெசித் மாலிங்க, ரங்கன ஹேரத், ருமேஷ் களுவிதாரண, ரஷல் ஆர்னெல்ட், ஓ.வி.எஸ்.மஹ்ரூப் போன்ற வீரர்கள் தெரிவாகியுள்ளனர்.

அதே வேளையில் இந்த ஆண்டில் ஒக்டோபர் மாதம் இலங்கை அணி சார்ஸா



கிண்ணப் போட்டிகளிலும் கலந்து கொள்ளவுள்ளது. நவம்பர் மாதத்தில் இலங்கை பங்களாதேசுக்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டு ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. டிசம்பர் மாதத்தில் நியூசிலாந்து சென்று அங்கும் ஒரு நாள் ஆட்டத்திலும், டெஸ்ட் ஆட்டத்திலும் இலங்கை அணி கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2005ம் ஆண்டில் மூன்று பிரதான சுற்றுப் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்த ஆண்டில் மார்ச் மாதம் சுற்றுப் பயணமொன்றினை மேற்கொண்டு இலங்கை வரும் பாகிஸ்தான் அணி இலங்கை அணியுடன் ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ள அதே ஆண்டின் ஜுலை மேற்கிந்திய தீவுகள் அணியும் சுற்றுப்பயணமொன்றை மேற் கொண்டு இலங்கை வந்து ஒரு நாள் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. அத்தோடு 2005ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்திய சுற்றுப் பயணமொன்றினை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை அணி அங்கு ஒரு நாள் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் விளை யாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையணி2006ம் ஆண்டில் மூன்று முக்கிய போட்டிகளில் விளையாடவுள்ளது. அதில் 2006ம் ஆண்டு மார்ச் மாதமளவில் இலங்கை அணி பாகிஸ்தான் சென்று அங்கு ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. மே மாதம் இலங்கை அணி இங்கிலாந்துக்கான சுற்றுப் பயணமொன்றையும் மேற்கொண்டு ஒரு நாள் போட்டிகளிலும், டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. இதேவேளை 2006ம் ஆண்டில் இலங்கை வரவுள்ள தென்னாபிரிக்க அணியுடனும் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை 2007ம் ஆண்டு நடை பெறவுள்ள உலகக் கிண்ணச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள இலங்கை வரவுள்ள சிம்பாவேயுடனும் பல சுற்றுப் போட்டிகளில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காவிரி நீர் தமிழகத்துக்கு திறந்து விட இந்தியப் பிரதமருக்கு வலியுறுத்தல்

(சென்னை -10 )

தமிழ்நாட்டுக்கு காவிரியில் தண்ணீர் திறக்க கர்நாடக அரசை வலியுறுத்துவேன் என்று எம்.பி.க்கள்



குழுவிடம் மன்மோகன் உறுதி அளித்துள்ளார். தமிழக முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சர் துரை முருகன் தலைமையில் தமிழகம் மற்றும் புதுவையைச் சேர்ந்த நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை அனைத்துக்கட்சிகளின் உறுப்பினர்களும் பிரதமர் மன் மோகன்சிங்கை டெல்லி ரேஸ்கோஸ் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு சந்தித்தனர். 45 நிமிடங்கள் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, பிரதமரிடம் தமிழக எம்.பி.க்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தனர். நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி இன்று வரை கர்நாடக அரசு தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க வில்லை என்றும், இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு 25 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட னர் என்றும் எம்.பி.க்கள் பிரதமரிடம் கூறினர்.

அதன்பின்னர், காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வலியுறுத்தும் மனுவினை பிரதமரிடம் தமிழக எம்.பி.க்கள் வழங்கினர். அம்மனுவில் கூறப்பட்டிருப்பதாவது- தாங்கள் இந்திய நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எங்களது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நேரத்தில், 1991 ஆம் ஆண்டில் காவிரி நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பின்படி, கர்நாடக அரசு தமிழகத்துக்குத் தண்ணீர் வழங்காததால் காவிரிப்படுகை விவசாயிகள் படும் துயர் குறித்து தங்கள் கவனத்தை ஈர்க்க விளைகிறோம். 1990ஆம் ஆண்டில் காவிரி நதிநீர்ப்பங்கீட்டு அளவு குறித்து முடிவு செய்ய நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு காவிரி நடுவர் மன்றம் தனது இடைக்காலத் தீர்ப்பாக, தமிழகத்துக்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீர் தரவேண்டும் என்றும், மாதம் ஒரு குறிப்பிட்ட அளவில் தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கியது. நடுவர் மன்றத் தீர்ப்பினைச் செயல்படுத்துவதற்காக பிரதமர் தலைமையிலான காவிரி நதிநீர் ஆணையம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

# அமெரிக்க துருப்பினர் மீது தொடர்ந்து ஈராக்கில் குறி

(ராய்டர் )

ஈராக்கில் கார் குண்டுவெடிப்பில் 4 ஈராக்கியர்கள் பலியாயினர். இதில் ஒரு அமெரிக்க வீரரும் பலியானார்இதுபற்றிய விபரம் வருமாறு- ஈராக் தலைநகர் பாக்தாத்திலிருந்து வடக்கே சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது அல்-பாரிஸ் என்ற இடம் இங்கேஅமெரிக்க கூட்டுப்படையினர் முகாம் அமைத்து தங்கியிருக்கின்ற னர்.இந்த ராணுவ முகாமில் நூற்று க்கணக்கான ஈராக்கியர்கள் தினமும் வேலை செய்து வருகிறார்கள். நேற்று முன்தி



னம் வழக்கம் போல் அங்கே பணிபுரியும் ஈராக்கியர்கள் காவலாளிகளின் சோதனைக்காக மெயின்கேட் வெளியே கியூவில் காத்துக் கொண்டிருந்த போது தற்கொலைப் படைத்தீவிரவாதி ஒருவரின் மூலம் இயக்கப்பட்ட கார் ஒன்றில் இருந்து திடீரென பயங்கர குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. மெயின் கேட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் இந்தக் கார் குண்டுவெடிப்பு நிகழ்ந்த போது ஒரு அமெரிக்கவீரரும், 4 ஈராக்கியர்களும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். 16 ஈராக்கி யாகளும், 3அமெரிக்க வீரர்களும் பலத்த காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் அம்புலன்ஸ்கள் மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக அமெரிக்க கூட்டுப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஈராக்கில் கார் குண்டு வெடித்தது பத்து பேர் உடல் சிதறிப் பலி !

(ராய்டர் )

ஈராக்கிலுள்ள மொசூல் நகரில் நடந்த இரண்டு பயங்கர கார் குண்டு வெடிப்புக்களில் 10 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 100 பேர் காயமடைந்தனர். இது குறித்து அமெரிக்க ராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈராக் தலைநகர் பக்தாத்தி

## உலக செய்திகள்

லிருந்து 360 கி.மீ தொலைவிலுள்ளது. மொசூல்நகரம் இங்குள்ள பள்ளிக்கூடம் ஒன்றின் முன்பு இரண்டு கார்கள் வந்து நின்றது. திடீ



ரென அந்தக் காரிலிருந்து குண்டுகள் வெடித்துச் சிதறின. இந்தத்தாக்கு தலால் 10 பேர் உடல் சிதறி இறந்தனர். இறந்தவர்களிலின் எடல்கள் ரோட்டில் கிடந்தன.

குண்டு வெடிப்பில் மேலும் 100 பேர் படுகாயமடை ந்தனர். காயமடைந்தவர்கள் ராணுவ மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டனர்.ஆரஞ்சு நிற, வெள்ளை நிறக்கார்கள் இரண்டு மின்னல் வேகத்தில் வந்து பள்ளி கூடத்துக்குள் நுழைந்ததாக குண்டு வெடிப்பை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

குண்டு வெடிப்பில் 10க்கும் மேற்பட்ட கார்கள் தீ பிடித்து சாம்ப லாயின. குண்டு வெடிப்பால் ஏற்பட்ட நிலைமையை சரி செய்து கொண்டிருந்த போது 45 நிமிடம் கழித்து மீண்டும் ஒரு கார் குண்டு வெடித்தது. இதில் யாரும் இறந்ததாக தகவல் இல்லை.

# இந்திய நாடாளுமன்றிலும் அமளிதுமளி இருகரம் கூப்பி சபாநாயகர் அமைதி வேண்டினார்

(சென்னை -10 )

மக்களவை நேற்று முன்தினம் காலையில் கூடியதும் 4 எம்.பி.க்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. அதைத் தொ டர்ந்து முன்னாள்ரெயில்வே மந்திரி ஜோர்ஜ் பெர்னாண்டஸை பேசவருமாறு சபாநாயகர் அழைத்தார். உடனே ஆளும் கட்சி எம்.பி.க்கள் கூச்சல் போட்டு அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் கடும் அமளி வெடித்தது.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இருக்கையை விட்டு எழுந்து சபாநாயகர் இருக்கையை முற்றுகையிட்டனர். கறைபடிந்த ஊழல் மந்திரிகளே பதவியைவிட்டு விலகுங்கள் தீவன ஊழல், கஜானா திருடர்களே பதவியை விட்டுப் போங்கள் என்று இந்தியில் அவர் கள்கோசம் போட்டனர். ராஷ்டிரிய ஜனதாதள எம்.பி.க்களான ராம் கிரிபால் யாதவ், சகாப்தீன் ஆகியோர், பாபர் மசூதி இடிப்பு, சவப்பெட்டி ஊழலை கண்டித்து எதிர்க் கோஷம் போட் டார்கள். இருதரப்பு உறுப்பினர்களும் இருக்கையை விட்டு எழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த அமளி நடந்தபோது பிரதமர் மன்மோகன்சிங், சோனியா காந்தி, பிரணாப்முகர்ஜி அர்ஜூன்சிங், சிவராஜ் பட்டீல் ஆகியோர் அமைதியாக உட்கார்ந் திருந்தனர். ஏனைய ஆளும்கட்சி எம்.பி.க்கள் ரகளையில் ஈடுபட்டனர். எதிர்த்தரப்பில் அத்வானி அமைதியாக உட்கார்ந் திருந்தார். பெர்னாண்டஸ், வி.கே.மல்



ஹோத்ரா போன்றவர்கள் எழுந்து நின்று அமளியில் ஈடுபட்டனர்.

இந்த அமளிக்கு நடுவே, ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை காங்கிரஸ் உறுப்பினர் பவான்குமார் பன்சாலி கொண்டு வந்து பேசினார். ஜோதிராதித்யா சிந்தியா அதைவழிமொழிந்து பேசினார். ஆனால் அவர்கள் பேசியதுயார்காதிலும் விழவில்லை.

அமளியில் ஈடுபட்ட ஆளும் கட்சி எம்.பி.க்களை லல்லு பிரசாத் யாதவ், பி.எம்.சையத், பிரிய ரஞ்சன்தாஸ் முன்ஷி ஆகியோர் அமைதிபபடுத்தினார்கள். இருப்பினும் அமைதி ஏற்படவில்லை. நிலைமை கட்டுக்கடங்காமல் போவதை அறிந்த சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி அவை உறுப்பினர்கள் அமைதி காக்கவேண்டும். இருகரம் கூப்பி கேட்டுக் கொள்கிறேன் என்று வேண்டினார். ஆனால் யாரும் அதை காதில் போட்டுக் கொள்ளவில்லை.

அமளி தொடர்ந்து நீடித்ததால் சபாநாயகர் சோம்நாத் சட டர்ஜி பிற்பகல் 2 மணி வரை இர ண்டரை மணி நேரம் அவையை ஒத்திவைப்பதாக அறிவித்தார். அவை தொடங்கி 45 நிமிடத்தில் ஒத்திவைக்கப்பட்டது. மதிய உணவு இடை வேளைக்கு பின் அவை மீண்டும் கூடியது. அப்போதும் அமளி ஏற்பட்டது. எங்களுக்கு நீதி வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கோ ஷம் போட்டார்கள். அவையில் சகஜ நிலை ஏற்படாததால் சபையை நாள் முழுவதும் ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார். அவை ஒத்திவைக்கப்பட்டது.

# ஈராக்கிய கைதிகள் கொடுமையின் எதிரொலி சுற்றுலா பயணிகளுக்கு பிரிட்டன் எச்சரிக்கை!

(ராய்டர் )

"இந்தியா செல்லும் சுற்றுலாப் பயணிகள் முஸ்லிம் புனித தலங்களுக்கு குறிப்பாக உ.பி. மாநிலத் தலைநகரான லக்னோவுக்கு செல்ல வேண்டாம்"என்று பிரிட்டன் அறிவித்துள்ளது. அமெரிக்கா, பிரிட்டன் கூட்டுப்படைகள் ஈராக் நாட்டின் மீது போர் செய்ததன் எதிரொலியாகவும், தற்போது ஈராக் கைதிகளை வன்கொடுமை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முஸ்லிம் அமை ப்புகள் பல்வேறு கண்டனக் குரல் களை எழுப்பி வருகின்றன. உத்தரப்பிரதேச மாநிலத்தின் தலைநகரான லக்னோவில் உள்ள சியா அமைப்பின் சார்பில் மதகுருவான கால்பே ஜாவத் கடந்த 3-ம் திகதி "அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்தவர்கள் இந்த நகருக்குள் நுழையக் கூடாது. ஈராக்கில சிறையில் சித்திர வதை செய்வதை நிறுத்தி விட்டு, அமெரிக்க கூட்டுப்படைகள் ஈராக் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். அது வரைலக்னோ நகருக்குள் நுழையக் கூடாது.இதன் எதிரொலியாக பிரிட்டன் அரசாங்கம் தங்களது மக்களிடம் "இந்தியா செல்லும் பயணிகள் உத்தரப்பிர தேசம் மற்றும் முஸ்லிம் புனித தலங்களுக்கு செல்ல வேண்டாம் " என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

# யப்பானில் சட்டவிரோத தொழில் புரிந்த 28 ஆசிரியர்கள் கைது

(ராய்டர் )

யப்பானில் சட்டவிரோத தொழில் புரிந்து வந்த 28 ஆசிரியர்கள் யப்பான் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். வதிவிட அனுமதியின்றி அல்லது காலவதியான அனுமதியுடன் இருந்த தொழிலாளர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் அனேகர் சீனாவைச் சேர்ந்தவர்களென தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் எட்டுப் பேர் பெண்களாவர். அல்குவைதா அமைப்பின் செயற்பாடுகள்யப்பானில் மேற்கொள்வதைத் தடுக்கும் வகையில் யப்பானிய அரசாங்கத்தினால் குடிவரவு மற்றும் சுற்றுலாத்துறைகளில் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்டவிரோத தொழிலாளர்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக யப்பானிய பொலிசாரும் குடிவரவு அதிகாரிகளும் இணைந்து தேடுதல்களை மேற்கொண்டுவருகின்றனர்.கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் தகுந்த விசாரணைகளின் பின்னர் அவர்களது நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளை நசுக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்

## திருமலை கலை இலக்கிய அமைப்பு

(எஸ்.எஸ்.குமார்)

இரண்டு தசாப்தத்திற்கு மேலாக தொடர்ந்த யுத்தச் சூழலில் அரசியல்வாதிகளையும் மீறி ஊடகவியலாளர்கள் பணியாற்றியிருக்கின்றார்கள். இதனை தமிழர் தேசம் நன்குணரும்.மக்களோடு மக்களாக வாழ்ந்து மக்கள் மீதான உரிமை மீறல்களையும், அடக்குமுறைகளையும் உலகிற்கு உணர்த்துபவர்களாக பத்தரி கையாளர்கள்தான் இருந்தனர். போராட்டக் காலத்தில் ஒவ்வொரு தமிழ் பத்திரிகையானது பேனாவும் ஒரு போர்வளாகத் தொழில்பட்டது என்பதே யதார்த்தம்.

இவ்வாறு திருகோணமலை கலை இலக்கிய அமைப்புக் குழு கருத்து சுதந்திரத்தின் குரல் வளை நசிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்திரிகையாளனது முதுகுக்குப் பின்னாலும் ஒரு அடக்குமுறையாளரின் துப்பாக்கி அழுத்திக் கொண்டுதான் இருந்தது, இருக்கிறது. இந்த அழுத்தத்தையும் பொருட்படுத்தாது நிமிர்ந்து செயற்பட்ட பத்திரிகையா ளரைத் தான் நாம் இப்போது இழந்து நிற்கின்றோம்.

ஈழத்தின் சிரேஸ்ட பத்திரிகையாளரும், மட்டக்களப்பின் முன்னணி பத்திரிகையாளருமான திரு. ஐயாத்துரை நடேசன் அவர்கள் பேரினவாத ஒடுக்குமுறை அகோரத் தாண்டவமாடிய காலத்தில் தனது எழுத்துப் பணியால் தமிழர்தேசியத்தோடு தன்னைப் பிணைத்துக் கொண்டவர். பேரினவாதம் தணிக்கை அச்சுறுத்தல், அடக்குமுறை, அழித்தொழிப்பு என்றெல்லாம் கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நசுக்கிய போதெல்லாம் துணிந்து செயலாற்றி, மட்டக்களப்பு மக்கள் மீதான உரிமை மீறல்களையும் அடக்கு முறைகளையும் உலகிற்கு அம்பலப்படுத்தியவர் திரு நடேசன். இன்று அவரின் குரல்வளை நசுக்கப்பட்டு விட்டது. உண்மையில் இது ஒரு நடேசன் என்ற தனிமனிதனின் பிரச்சினையல்ல. ஒட்டுமொத்த மக்கள் சார்ந்த பிரச்சினை. பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுவதையும் தாக்கப்படுவதையும் எழுத்தாளர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். கருத்துச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரத்திற்காக குரல் கொடுப்போரும் மதிக்கப்பட வேண்டும். போற்றப்பட வேண்டும் என மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற மோதல்களின் சுவாரசியமான நிகழ்வுகள்

(கொழும்பு நிருபர்)

இன்றைய நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், மோதல்கள் மட்டுமன்றி சில சுவாரசியமான சம்பவங்களும் இடம்பெற்றதாக அறிய முடிகிறது.ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடையேயான மோதல்களை புகைப்படம் பிடிக்கும் நடவடிக்கைகளில் ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தொடர்ந்து விமர்சித்துவரும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், அரசாங்க தரப்பினரால் தாக்கப்பட்டதையும், அவமதிக்கப்பட்டதையும், இதனை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான நல்லபிப்பிராயங்களை ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது.

# தமிழீழ விளையாட்டுத் துறையினால் ஐந்து தடகள மைதானங்கள் அமைப்பு

(யாழ் நிருபர்)

ஒவ்வொரு மைதானமும் தலா 5 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படுகின்றன. மட்டக்களப்பில் கரடியனாறு, திருகோணமலையில் சம்பூர், வவுனியாவில் கனகராயன்குளம், மன்னாரில் அடம்பன், கிளிநொச்சி ஆகிய இடங்களில் 5 விளையாட்டு மைதானங்களும் மொத்தம் 25 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு இவை 400 மீற்றர் ஓட்டத்தடத்தையும், உதைபந்தாட்ட மைதானத்தையும் கொண்டிருக்கும். இவை மாவட்ட மைதானங்களாகவே இருக்கும். அத்துடன் லண்டனிலும் TSSA எனப்படும் விளையாட்டுக்களுக்கான தமிழ் பாடசாலை அமைப்பின் நிதியுதவியில் கிளிநொச்சி அறிவியல் நகரில் 30 ஏக்கர் பரப்பளவில் விளையாட்டுக்கல்லூரி ஒன்றை அமைக்கும் நடவடிக்கையை தமிழீழவிளையாட்டுத்துறை மேற்கொண்டுள்ளது.

# நடேசன் படுகொலை தொடர்பாக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் வேண்டுகோள்

(கொழும்பு நிருபர்)

ஊடகவியலாளர் ஜி. நடேசனின் படுகொலை தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு உலகம் பூராகவும் ஐந்து லட்சம் ஊடகவியலாளர்களைக் கொண்ட சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் சிறிலங்கா அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தனது துணிச்சலான ஊடகச் செயற்பாடுகளால் சர்வதேச சமுகத்தினரின் கருத்தையும், கவனத்தையும் ஈர்த்த ஜி.நடேசன் கொலல்லப்பட்டமை காட்டுமிராண்டித்தனமானது எனவும், இது இலங்கையில் சமாதான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்பதாகவும் சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கிழக்கில் தொடர்ச்சியாக இடம் பெறும் படுகொலைகள் தொடர்பான நடேசனின் இறுதி ஆய்வுக் கட்டுரை சிறிலங்கா அரசாங்கத்துக்கும், அரச படையினருக்கும் அசெளகரியங்களை ஏற்படுத்தியிருந்ததாகவும் சர்வதேச ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் கிறிஸ்தோபர் வொரன் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ் ஊடகவியலாளர் டி.சிவராமின் வீட்டின் மீதான சிறிலங்கா பொலிசாரின் அத்துமீறல் சோதனை இடம்பெற்று சில நாட்களுக்குள் தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டமை கண்டிக்கத்தக்கதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழர் தாயகம் தழுவியரீதியில் மாபெரும் விளையாட்டுப் போட்டி

(கொழும்பு நிருபர்)

1600 தமிழீழ விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் தடகளப்போட்டி யாழ்ப்பாணத்தில் இம்மாதம் தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடத்தப்பட ஏற்பாடாகிவருகின்றது. தடகள விளையாட்டு வீரர்களின் திறமையை தாயகம் தழுவிய ரீதியில் வெளிப்படுத்துவதற்காக இந்தப் போட்டிகளை தமிழீழ விளையாட்டுத் துறை நடத்தவுள்ளது. இம்மாதம் 19 ஆம், 20 ஆம் நாட்களில் யாழ் நகர பொது மைதானத்தில் தமிழீழ தடகளப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

## எங்கள் குரல்

# மின்சாரம் எப்போது

போரதீவுப்பற்றுபிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட கிராமங்களான பொறுகாமம், புன்னைக் குளம் என்ற 2 கிராமங்களும் இது வரை யில் மின்சாரத்தை அனுபவிக்காத கிராமங்களாகும்.இக்கிராமத்திலே போரதீவுப்பற்றுப் பிரதேச சமுர்த்தி சோனல் அலுவலகம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு அனைத்து பிரதேசங்களுக்குக் கிடைக்கும் மின்சாரம் இக்கிராமத்தினூடாகவே கடந்து செல்கின்றது.

கடந்த காலத்தில் பாராளுமன்றம் சென்ற உறுப்பினர்கள் இக்கிராமத்துக்கு மின்சாரம் தருவதாக வாக்களித்தே இக்கிராமமக்களிடம் இருந்து அனைத்து வாக்குகளையும் பெற்றார்கள். ஆனால் இது வரையில் இக்கிராமமக்கள் தங்கள் ஊரின் மேலாகசெல்லும் மின் கம்பிகளை மட்டுமே பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இன்னமும் பாவனை மின்சாரம் வழங்கப்படவில்லை.

எனவே இதற்குப்பொறுப்பான அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு இதுவரை இருளில் கிடக்கும் இக்கிராம மக்களையும் வெளிச்சத்தில் கொண்டுவந்து விடிவு தருமாறு வேண்டுகிறேன்.

தங்கராசா

# இராணுவ முகாம்களாக இருக்கும் வீடுகளுக்கு கொடுப்பனவு இல்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பல இராணுவ முகாம்கள் இங்குள்ள மக்களின் வீடுகளை உள்ளடக்கியதாகவே உள்ளது. இதில் முக்கியமாக கொம்மாதுறை இராணுவ முகாமானது சுமார் 25 வீடுகளுடன், 2 கோயில்களும் 1பாடசாலையும் அடங்கிய ஒருபரந்த நிலப்பரப்பை கொண்டதாக உள்ளது. இம்முகாமானது சுமார் 15 வருடங்களுக்கு மேற்பட்டதாகும். இதில் குடியிருந்த குடும்பங்கள் தற்பொழுது மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் வாடகைவீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் வீடுகளுக்குக் கொடுப்பனவுப் பணங்கள் கடந்த பல வருடமாக வழங்கப்பட்டுவந்தது.

ஆனால் தற்பொழுது இதற்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், தங்கள் காணிசம்மந்தமான அத்தாட்சிகளை கேட்டு அரசிடம இருந்து மூன்றுக்கு மேற்பட்ட கடிதங்கள் வந்ததாகவும், அவற்றை மீண்டும் மீண்டும் அனுப்பியும் அதற்கான முடிவுகள் கிடைக்கவில்லை என்று வீட்டு உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நலன் விரும்பி

# கட்டடவசதி இல்லாமலும் நீர் வசதி இல்லாமலும் இயங்கும் நாவிதன் வெளி பிரதேச செயலகம்

நாவிதன்வெளிப் பிரதேச செயலகமானது. பிரதேச செயலகத்திற்கான கட்டடவசதி இல்லாதகாரணத்தினால் கடந்த 5 வருடகாலமாக சுமநல கேந்திர நிலையத்தில் இயங்கிவருகின்றது. இப்பிரதேசசெயலகம் மூலம் தமிழ், முஸ்லிம் மக்கள் தமது சேவையினைப் பெற்று வருகிறார்கள். மக்களுக்கு சிறப்பானமுறையில் சேவைசெய்வதற்கும், மக்களை ஒன்று கூட்டுவதற்கும் போதிய கட்டடவசதிகள் இல்லாமல் இருக்கின்றது.

இது சம்பந்தமாக பிரதேச செயலாளர் திரு.கோபாலரெட்ணம் அவர்கள் பல உயர் அதிகாரிகளிடமும், பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், அமைச்சர்களிடமும் முறையிட்டுள்ளனர். இது வரையில் எது வித நடவடிக்கைகளும் எடுக்க வில்லை எனவும் மேலும் குடிநீர் வசதி இல்லாமையால் இங்கு கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களும், சேவையினைப் பெறவரும் பொது மக்களும் குடிநீர்ப் பிரச்சினையை எதிர் கொள்கின்றார்கள் எனவே சம்பந்த ப்பட்டவர்கள் கட்டடவசதியினையும், குடிநீர் வசதியினையும் ஏற்படுத்தித் தருமாறு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

தாசன்

# ஒன்றுகூடல் மண்டபத்தின் மேடை உடைந்த நிலை

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபமானது பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டது. ஆனால் இம் மண்டபத்திலுள்ள மேடையில் போடப்பட்டுள்ள பலகை தற்போது கறையான் பிடித்து இருந்துள்ளதன் காரணமாக பலகைகள் உடைந்து ஓட்டையாகக் காணப்படுகிறது.

பாடசாலையில் இடம் பெறும் நிகழ்வுகளையோ, கூட்ட ங்களையோ நடாத்த முடியாத நிலையில் தற்போது இம்மேடை உள்ளது.

இம்மேடையில் சில நிகழ்ச்சிகளை நடாத்திய போது சிலர் தமது கால்களை உடைத்துக் கொண்டு,காயப்படுத்திய சம்பவங்களும் உண்டு. இதனைப் பல்வேறு தடவைகள் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இதனை முற்றாகத் திருத்தியமைப்பதற்கோ அல்லது புதிதாக இம்மேடையை அமைத்துத் தருவதற்கோ கல்வி அதிகா ரிகள் முன்வர வில்லையென, ஆசிரியர்களும் மாணவர்களும் வீசனம் தெரிவிக்கின்றனர்.தமது அத்தியாவ சிய தேவையான இம் மேடையைத் திருத்தித் தருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எஸ். சிவராஜா

# பேரினவாத அரசு சதி

"கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற முதுமொழி தற்போது மருவிவரும் காலமாகி விட்டது. மட்டக்களப்பில் கற்றார் சென்றால் சென்ற இடமெல்லாம் துப்பாக்கி சூடு என்ற காலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழன் ஒருவன் தன்திறமையையும் அவனுக்கு நடக்கும் அட்டுளியங்களையும் நாட்டிற்கும் வெளியுலகிற்கும் எடுத்துக்காட்ட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு காலமாக நடை பெறாத அந்த செயல் சொற்ப காலமாக நடை பெற்று வருவதுதான் புரியாத புதிராக உள்ளது.பேரினவாத அரசாங்கத்துடன் அண்மைக்காலமாக இணைந்து செயற்படும் துரோகிகளும் சேர்ந்து தான் இப்படியான செயலில் இறங்குகிறார்கள். அறிவும் உண்மையான தமிழ்த்தாயின் உணர்வும் தமிழ்த் தாயின் வேதனையிலும் பிறந்த எந்த ஜீவனும் இதைச் செய்ய முன் வராது தமிழினத்தை அழித்து விடுவோம் என்ற சிங்கள பேரினவாதத்திற்கு விலைபோன துரோகிகள் அவர்களுடன் இணை ந்து செயற்படுவது கோழைத் தனமான செயலாகும் இதை ஒவ்வொரு தமிழனும் வண்மையாக கண்டிக்கிறான். சுட்டு விட்டு தப்பிச் செல்லும் எதிரி எவனோ அவனைக்கட்டாயம் கண்டவர்கள் அஞ்சாமல் இனங்காட்டவேண்டும்.

எஸ்.எம்.முத்து



**சிந்தனைக்கு**

எதிரியிடம் ஆயுதபலம் உண்டு ஆட்பலம் உண்டு. ஆதரவளிக்கும் நாடுகளுமுண்டு. நாம் தனித்து நின்று போராடுகிறோம். எமக்கு எந்த நாட்டின் உதவியும் இல்லை. ஆனால் எமக்குள்ள ஒரேயொரு பலம் எமது ஆத்மபலம்

தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303
batti@eezhanatham.com
10.06.2004

# அசியல் தளம்பல்கள்

சிறிலங்காவின் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமளிதுமளி, கைகலப்பு என்பவற்றின் எதிரொலியாக தொங்கு நாடாளுமன்றத்தில் நிற்கும் ஜனாதிபதி தலைமையிலான ஆளும் கூட்டு முகாம் மிகுந்த நெருக்கடிகளை எதிர் நோக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அறுதிப் பெரும்பான்மை பலமின்றி இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான ஒரு நிலை ஏற்படுமானால் சமாதான நடவடிக்கைகள் பாரிய பின்னடைவை சந்திக்க வேண்டி வரும். அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதும் தமிழ், மக்கள் எதிர்பார்த்தளவிலான இயல்பு நிலை ஏற்படுத்தப்படவில்லை இதனை அடிப்படையாகக் கொண்டு நிரந்தரச் சமாதானத்துக்கு முன்னதாக வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் மனிதாபிமான அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணம் புனரமைக்கப்பட வேண்டும் என்பதையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதனை செயற்படுத்த வேண்டுமென்பதற்கான வலியுறுத்தல் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட போதும், இன்றைய ஜனாதிபதி அரசு அவற்றை புறக்கணிப்பு செய்து வருவதுடன் இழுத்தடிப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்த பின்னர் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு நோர்வேயின் அனுசரணையை நாடிய போதும் ஒரு காத்திரமான தமிழ் சமூகத்துக்கு நம்பிக்கையூட்டக் கூடிய பேச்சுக்களை தொடர்வதற்கு சந்திரிகா அரசு பின்னடித்து வருவது சமாதானத்தின் பால் கொண்டுள்ள நம்பிக்கையை சிதறடித்துள்ளது.

தற்போது சமாதானத் தீர்வு முயற்சியை முன்னெடுக்க முன்னதாக தமது ஆட்சியை தக்க வைத்துக் கொண்டுதான் அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்ள வேண்டிய தர்ம சங்கடமான ஒரு நிலை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஏற்பட்டுள்ளது.

தற்போது ஹெலஉறுமய கட்சியின் இரு நாடாளுமன்ற தேரர்கள் நாடாளுமன்றத்துக்குள் தாக்கப்பட்டு படுகாயமடைந்தமை அவர்களது, அங்க வஸ்திரத்தை களைய முனைந்தமை போன்ற அடாவடித்தனங்கள் ஜனாநாயக ஆட்சியை கேள்விக் குறியாக்கியுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரின் ஆதரவு எவ்வாறு அமையுமோ அதனடிப்படையிலேயே நாடாளுமன்ற அரசியல் கள நிலவரம் அமையப் போகிறது.

தற்போது சமாதானப் பேச்சுக்களையும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையையும் இழுத்தடித்து வரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவை பெறுவதென்பது சாத்தியப்படாத விடயம். எனவே தற்போது தோன்றியுள்ள அரசியல் கள நிலவரங்கள் எதிர்வரும் காலங்களில் தளம்பல் நிலையை உருவாக்கிவிடும்.

# தனித்தரப்பு கிடைத்தால் வடக்கு கிழக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும்.

## -ஐக்கிய முஸ்லிம் மக்கள் கட்சி கோருகிறது-

(ஏ.எல்.எம்.சலீம்)

இனப்பிரச்சினைக்கான தீர்வுப்பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு கிடைக்குமானால் ,சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் ஏனைய வடக்கு கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் அறிவுள்ள புத்திஜீவிகளும் மட்டுமே அதில் இடம்பெற வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய முஸ்லிம் மக்கள் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல்மஜீத் விடுத்துள்ள அறிக்கையொன்றில் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய முஸ்லிம் மக்கள் கட்சிசார்பில் அவர் இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

இந்தஅறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

''அரசு புலிகள் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டால் முஸ்லிம்கள் தனித்தரப் பாக ஏற்கப்படுவார்களா? என்பது கேள்விக் குறியாகியுள்ள போதும் அவ்வாறு தனித்தரப்புக் கிடைத்தால் யார் கலந்து கொள்வது என்பதில் முஸ்லிம் சமூகம் முட்டி மோதிக் கொள்ளும் என்ற கருத்துக்கள் சில அரசியல் வாதிகளால் முன்வைக் கப்பட்டு வருகின்றன.

தனித்தரப்பாகச் செல்வதாயின் முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் செல்வதா அல்லது ஆட்சியிலமர்ந்துள்ள முஸ்லிம் பாராளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் செல்வதா அல்லது தென்னிலங்கை அரசியல் வாதிகளையும் இணைப்பதா என்ற வாதப்பிரதி வாதங்கள் எழுந்துள்ளன.

இவை அனைத்தும் முஸ்லிம் சமூகத்தை பலவீனப்படுத்தும் அர்த்தமற்ற வாதங்களாகுமென்பதே முஸ்லிம் மக்கள் கட்சியின் தெளிவான நிலைப்பாடாகும்.

உண்மையில் தனித்தரப்பு என்பது எந்த மாகாணங்களுக்காக என்பது உணரப்படவேண்டும்

பேச்சுவார்த்தை என்பது விடுதலைப்புலிகளின் வடக்கு கிழக்கிற்கான அதிகாரததை முன்வைத்தே நடைபெறப்போகின்றது.

ஆகவே முஸ்லிம்களின் தனித்தரப்பு ஏற்கப்படுமாயின் வடக்கு கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும்அம்மாகாணத்தைச் சேர்ந்த அரசியல் புத்திஜீவிகளுமே பேச்சு வார்த்தையில் தனித்தரப்பாகப்பங்குபற்ற வேண்டுமென்பதே யதார்த்தமானது என்பது உணரப்படவேண்டும் என்றார்.

# வளத்தாப்பிட்டி வாழ் தமிழ் மக்களுக்கு குடியிருப்பு உத்தரவுப் பத்திரம் இல்லை.

## -தொழிலாளர்கள் முறைப்பாடு -

(விரி.சகாதேவராசா)

வளத்தாப்பிட்டி மற்றும் உதயபுரம் தமிழ்க் கிராமங்களில் வசிக்கின்ற மக்களுக்கு இதுவரை குடியிருப்பு உத்தரவுப் பத்திரம் வழங்கப்படவில்லை. அதனைப் பெற்றுத்தர உதவுமாறு வேண்டுகிறோம்.

இவ்வாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் சம்மாந்துறைப் பிரதேசசபை சிறு பணியாளர்களின் நலன்கருதி கூட்டமொன்றை சம்மாந்துறை நகர மண்டபத்தில் ஞாயிறன்று தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் நடாத்தியது.

அங்கு பிரதேசசபையின் சிறு பணியாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், குறைபாடுகள் பற்றிக் கேட்டறியப்பட்டது. தொழிலாளர்கள் முன்வைத்த பிரச்சினைகளில் சில வருமாறு:-

சம்மாந்துறை பிரதேச சபைக்கான ஆளணி வெற்றிடத்திற்குத் தேவையான ஊழியர் களை இணைத்துக் கொள்ளல். இருக்கிறவர்களை நிரந்தரமாக்க வேண்டும்.வழங்கப்படாமலிருக்கும் நூலக உதவியாளர்கள் உழைக்கும் போது வழங்கப்படும் கொடுப்பனவு உடன் வழங்கப்பட வேண்டும்., பிரதேசசபை ஊழியர்களின் குறைபாடுகள் தொடர்பாக பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலுக்கு அறிவிக்கப்படல் வேண்டும். சங்க உபதலைவர் எம்.ஏ.வகாப் நன்றியுரையாற்றினார்.

# அரசியல் பலமில்லாத காரணத்தினால் தான் அம்பாறை தமிழர்களின் உரிமைகள் பறி போனது.

## -தமிழர் மகாசங்கத் தலைவர் எச்சரிக்கை-

(விரி.சகாதேவராஜா)

அரசியல் பலமில்லாத, காரணத்தினால் கடந்த காலங்களில் அம்பாறை மாவட்ட தமிழ்மக்கள் எல்லாவற்றையும் இழந்துள்ளார்கள். இழப்பதற்கு இனி ஒன்றுமேயில்லை என்ற கட்டத்தில் மீண்டுமொரு தெம்பு பிறந்துள்ளது. இக்கட்டத்திலாவது ஒற்றுமைப்பட்டு செயற்பட்டால் இழந்ததைப் பெறலாம். இன்றேல் தவிக்க நேரிடும்.

இவ்வாறு கல்முனை ஆதார வைத்தியசாலை தரமுயர்த்துவது தொடர்பான மக்கள் கூட்டத்தில் பேசிய அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கத் தலைவர் பி.சுப்பிரமணியம் எச்சரித்தார்.

அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கமும், அகில இலங்கை பொது ஊழியர் முன்னணியும் இணைந்து 135 வருடகாலம் பழமை வாய்ந்த கல்முனை ஆதார வைத்தியசாலை தரமுயர்த்தல் தொடர்பான மக்கள்கூட்டமொன்றை ஞாயிறன்று வைத்தியசாலையில் நடாத்தின. மகாசங்கத் தலைவர் பி.சுப்பிரமணியமும், ஊழியர் முன்னணித் தலைவர் எஸ்.லோகநாதனும் கூட்டத்திற்குத் தலைமை வகித்தனர்.

நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# பாடசாலை ஆசிரியர்களுக்கு தகவல் தொழிநுட்பப் பாடநெறி

(எஸ்.சிவராசா)

தகவல் தொழில் நுட்பப் பாடத்தை பாடசாலைகளில் அரசு அமுல்படுத்தி வருகிறது. இதன் மூலம் எதிர்கால சந்ததியினரான மாணவர்களுக்கு தகவல் தொழில் நுட்பம் பற்றிய அறிவை வளர்க்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு முதலில் ஆசிரியர்களை பயிற்றுவித்தல் வேண்டும். இதற்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து மூன்று ஆசிரியர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கான பயிற்சிகள் கல்முனையிலும் இரண்டாவது பயிற்சிகள் தெஹியத்த கண்டியிலும் தற்போது இடம் பெற்றுவருகின்றது. இவ்வாறு பயிற்சியை முடித்துக் கொண்டவர்கள் தாம் பாடசாலைகளில் மேற்கொள்ளும் கணனிப் பணிகளை மேற்பார்வையிடுவதற்காக அதிகாரிகள் ஒகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் பாடசாலைக்கு வரஇருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



இடைவிலகிய பாடசாலை மாணவர்களை மீண்டும் இணைத்துக் கொள்வது தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி அரசடித்தீவில் நடைபெற்றது. இந்தப் பேரணியில் கலந்துகொண்ட மாணவர்களையும் விழிப்பூட்டல் நிகழ்வுகளையும் படத்தில் காணலாம். (படம். இ. வரதராஜன்)

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

## புன்னைச்சோலை பத்திரகாளி அம்பாள் ஆலய உற்சவம்

(சி.பி.ஹரிச்சந்திரன்)

மட்டக்களப்பு புன்னைச்சோலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிறது.

முதல்நாள் அன்று இரவு 8.00 மணிக்கு திருக்கதவு திறக்கும் வைபவத்துடன் அம்பாள் எழுந்தருளப் பண்ணி பூசைகள் இடம்பெறும்.

**கல்வி...**

சபை, எஸ்.பத்மநாதன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு மருத்துவ பீடத்திற்கு மாணவர்கள் இணைந்து கொள்ளப்படவுள்ளனர்.

இச்சந்திப்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பிரதித் தலைவர் ரத்நாயக்க, உறுப்பினர், கலாநிதி ஹுல் மேலதிக செயலர் நந்தசேன ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மட்.குறிஞ்சா...**

இதேவேளை குறிஞ்சாமுனை கன்னன்குடா போன்ற கிராமங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் விமானப்படையினரால் வீசப்பட்டு அண்மையில் மெக் நிறுவனத்தினரால் அடையாளப்படுத்தப்பட்ட குண்டுகள் விரைவில் செயலிழக்கச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**தமிழ்...**

ட்டிருக்கும் பிணக்கு அறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத சூழ்நிலை மற்றும் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லா பிரேரணை போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்க எதிரணி வியூகமமைத்துள்ள நிலையில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுடனான சந்திப்பு முக்கியத்துவம் மிக்கதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சிறிலங்கா...**

தாக விமானப்படையின் குறூப் கப்டன் அஜந்த சில்வா தெரிவித்தார்.

இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

களப்பில் வீழ்ந்து விபத்துக்குள்ளான விமானத்தை கரைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விபத்துக்குள்ளான விமானமானது உக்ரேய்ன் நாட்டுத் தயாரிப்பாகும். இந்த விமானம் 2000 ஆம் ஆண்டில் இரண்டு மில்லியன் டொலருக்கு கொள்வனவு செய்யப்பட்டதாக விமானப்படையின் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த விமான விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக விமானப்படைத் தளபதி குழுவொன்றை நியமதித்துள்ளார்.

விமான விபத்து தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருவதாக செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

இந்த விபத்து தொடர்பாக முதற்கட்ட விசாரணை அறிக்கையொன்றை இன்று மாலைக்குள் சமர்ப்பிக்குமாறு விமானப்படைத் தளபதி கோரியுள்ளார். விமான விபத்து இடம்பெற்ற பிரதேசம் முழுவதும், பாதுகாப்பு பலப்படுத்துப்பட்டுள்ளது.

இதேவேளை, விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டியை விமானப்படையினர் விசாரணைக்காக பொறுப்பேற்றுள்ளனர். இந்த விசாரணையின் போது விமானத்தை தயாரித்த உக்ரேய்ன் நிறுவனத்தின் உதவியையும் பெற்றுக்கொள்ள இருப்பதாககுறூப் கப்டன் அஜந்த சில்வா தெரிவித்துள்ளார்.

**வவுனியா...**

அழகரசன் வவுனியாவிலிருந்து பூந்தோட்டம் நோக்கி மோட்டார் வண்டியில் சென்ற போது வழிமறித்த போக்குவரத்து பொலிசார் வாய் தகராறில் ஈடுபட்டு பின்னர் அவரைத் தாக்கியுள்ளனர். இதனைக் கண்ட ஒருவர் அரசியல்துறைக்கு தொலைபேசிமூலம் தெரிவித்துள்ளார்.

உடனடியாக தளத்திற்கு விரைந்த வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேலு, நகரப் பொறுப்பாளர் தர்மேந்திரா ஆகியோர், நிலைமையை நேரில் அவதானித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.இதனையடுத்து தளத்திற்கு போர்நிறுத்த கண்காணிப்புக்குழு சென்று இரு தரப்பினரையும் விசாரணை நடத்தியுள்ளனர்.

இதுகுறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவைத் தொடர்பு கொண்ட ஞானவேலு, அரசியல் வேலை திட்டங்களுக்காக வந்துள்ள போராளிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் இது போன்று இனி எந்த சம்பவமும் இடம் பெறாதிருக்க உறுதி தரப்படவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்.

# அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் இடைவிலகிய 610 பேர் இணைவு

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில்போர்ச் சூழல் காரணமாகவும், மற்றும் வேறு காரணங்களுக்காகவும் பாடசாலைக் கல்வியை இழந்த (பதினெட்டு) 18வயதுக்குட்பட்ட மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதாக அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் யு.எம். எம். ஹாசிம் தெரிவித்தார்.

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலைகளில் இணைந்த மாணவர்களுக்கான உபகரணப் பொதிகளையும், பாடசாலைச் சீருடைத்துணிகளையும் எதிர்வரும் 15ம் திகதிக்குள் மாணவர்களிற்கு வழங்கி முடிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக வலயத்தில் உள்ள 93 அதிபர்களுக்கான அறிவூட்டல் கருத்தரங்கு யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் இன்று அக்கரைப்பற்று கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலைக் கல்வியை இழந்து இதுவரை பாடசாலைகளில் இணைந்து கொள்ளாத மாணவர்கள் தாங்கள் ஏற்கனவே கற்ற பாடசாலை அல்லது அருகில் உள்ள பாடசாலைகளில் இணைந்து கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

610 மாணவர்களும் கடந்த மூன்று வாரத்திற்குள் பாடசாலைகளில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**சர்வதேச...**

லையை ஏற்படுத்தித் தந்திருப்பது தமிழீழ விடுதலைப் போராட்டம், பதினெண் ணாயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்ட விடுதலை, இந்தத் தியாகங்களால்தான் சர்வதேச ரீதியாக ஈழத்தமிழர்களை உயர் நிலையில் பார்க்கின்றார்கள் என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1995ஆம் ஆண்டு ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் ஒன்றாக யாழ்.குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வந்தபோது திரும்பிப் பார்க்காத சர்வதேசம் இன்று வன்னிக்கு வந்திருப்பதன் காரணம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றியே என்று தெரிவித்த அவர் வெற்றிக்கான அடிக்கல்லை நாட்டியவர்கள் மாவீரர்கள் என்றார்.

ஜயசிக்குறு, ஓயாத அலைகள் ஒன்று, இரண்டு, மூன்று நடவடிக்கைளின் வெற்றிகளுக்கெல்லாம் அக்காலப்பகுதிகளில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் ஆளுகையின் கீழ் வன்னிப் பகுதியில் இருந்த மூன்று இலட்சம் மக்களிடம் இருந் துதான் போருக்கான படைத்திர ட்டல் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்று தெரிவித்த கேணல் சூசை அவர்கள், ஸ்ரீலங்கா அரசு ஒன்றரைக் கோடி மக்களிடம் இருந்து படைத்திரட்டலை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதலை மேற்கொள்ள முன்வந்து தோல்வி கண்டதையும் சுட்டிக் காட்டினார்.

மட்டக்களப்பில் இடம்பெறுகின்ற படுகொலைச் சம்பவங்களிற்குப் பின்னணியில் ஸ்ரீலங்கா படைத்தரப்பு செயற்பட்டு வரும் நிலையிலும் சமாதான நடவடிக்கைகள் சுமூகமாக இடம்பெறுவதாகவும், இந்நிலைப்பாடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிக் கொணரவேண்டும் என்றார்.

இவ்வளவு காலமும் தமிழீழ விடுதலைப்புலிகள் ராணுவ ரீதியான வெற்றியை சர்வதேசத்திற்கு எடுத்து தெரிவித்தார்கள், இன்றைய சூழலில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் அரசியல் ரீதியாக அரசாங்கத்தின் நிலை, எதிர்க்கட்சியின் நிலை உள்ளிட்ட ஒவ்வொருவருடைய முகத்திரையையும் வெளிக்காட்டும் வகையில் செயற்படல் வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக வித்தியானந்தக் கல்லூரி முதல்வர் பே.கணேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் ஏற்றிவைத்தார்.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சைச் சேர்ந்த விசாகலிங்கம் கட்டடத்தினை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். கட்டடத்திற்கான பெயர்ப் பலகையினை ஓய்வுபெற்ற பாடசாலை முதல்வர் சிவக்கொழுந்து திரைநீக்கம் செய்துவைத்தார்.

நிகழ்வில் சிறப்புரையினை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்களும், கருத்துரைகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், வடக்கு கிழக்கு மாகாண கல்விஅமைச்சைச் சேர்ந்த விசாகலிங்கம், முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, புலிகளின்குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா. தமிழன்பன் உள்ளிட்டோர் நிகழ்த்தினர்.

இக் கணனிக் கட்டடத் திறப்பு நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர். இக்கணனிக் கட்டடம் மாவீரர் வீரவேங்கை சுகுவின் சகோதரன் கற்கண்டுவின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டதாகும்.

**பாராளுமன்ற...**

பெரும்பான்மைப் பலத்தை ஐ.தே.மு. நிரூபிக்கும் என்பது நிருபணமாகும் பட்சத்தில், சந்திரிகாவின் ஐ.ம.சு.மு.யிலிருந்தும் கூட ஒரு சிலர் கட்சி தாவி எதிர்க்கட்சி வரிசையில் வந்தமரக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.எப்படிப் பார்த்தாலும் ஐ.தே.மு. தனது பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும் வாய்ப்பே காணப்படுவதாக அரசியல் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளார்கள்.

இத்தகைய நிலைப்பாட்டை அவதானித்த ஜனாதிபதி சந்திரிகா அவசரமாக தமிழ் தேசிய கூட்டமைப்பினரை நேரடியாகச் சந்திக்க அழைப்பு விடுத்துள்ளார். சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளதாகக் கூறி, தமிழ் தேசிய கூட்டமைப்பைத் தன் பக்கம் வைத்திருக்க முயற்சியெடுக்கவுள்ள சந்திரிகா, அதற்கான வாய்ப்புக்கள் அமையாதவிடத்து, ஹெல உறுமயவுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஏதாவது ஒரு வகையில் தகராறை உருவாக்க முயல்வார் என்றும் அவதானிகள் தெரிவித்துள்ளார்கள்.

**மட்.செங்கல்...**

வியிடம் தெரிவித்தார்.

செங்கற்களின் தரம் குறைவாக உள்ளமை தொடர்பாகவும் இதனால் செங்கற்களின் விலை வீழ்ச்சி தொடர்பாகவும் சங்கத் தலைவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து பணிப்பாளர் பயிற்சிப் பட்டறைதொடர்பாகத் தெரிவித்தார்.

சிறுதொழில் முயற்சிக்கு உதவும் நிறுவனங்களின் ஊடாக பயிற்சி பெற்றுதர முடியும் எனவும் குறிப் பிட்டார்.

**நடேசன்...**

படவில்லை என இவர்கள் விசனம் தெரிவித்தனர்.

நிமலராஜன், நடேசன், சொய்சா போன்ற ஊடகவியலாளர்களின் படுகொலைகள் தொடர்பட்டியலாக இடம்பெறுவது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரன், மலையக மக்கள் முன்னணித் தலைவர்பெ.சந்திரசேகரன், மனோ கணேசன், மகேஸ்வரன், குமரகுருபரன் உட்படபலர் இந்த கண்டனப் பேரணியில் கலந்து கொண்டனர்.

இதேவேளை ஐயாத்துரை நடேசன், தம்பையா ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து திருகோணமலையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை இந்த ஹர்த்தாலை ஏற்பாடு செய்திருந்தது.

இக்ஹர்த்தாலினைத் தொடர்ந்து மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை. தனியார் கல்வி நிலையங்கள் இயங்கவில்லை, அரசாங்க திணைக்களங்கள் வர்த்த நிலையங்கள் மூடிக்காணப்பட்டன.

இதேவேளை திருகோணமலை மாவட்ட போக்குவரத்தும் இடம்பெறாத காரணத்தினால் நகர் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.




வாழைச்சேனை சீகோ சொலுசன் கணனி நிறுவனத்தை அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி திறந்து வைப்பதையும், வாழைச்சேனை மக்கள் வங்கி முகாமையாளர் கனகரெத்தினம் குத்து விளக்கேற்றுவதையும், மட்டக்களப்பு மக்கள் வங்கி நகரக்கிளை முகாமையாளர் சிவஞானராஜா, சீகோ நிறுவனப் பணிப்பாளர் சுதாகரன், மக்கள் வங்கி பாதுகாப்பு அத்தியட்சகர் சத்தியசீலன் ஆகியோரை படங்களில் காணலாம்.

இப்பத்திரிகை ... 10.06.2004 அன்று ...